சென்னை சிந்தாதிரிப்பேட்டை சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று (07.09.2023) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.இராதா கிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலக் குழுத்தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், கூடுதல்/இணை/துணை ஆணையர்கள், சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர், நிதி இயக்குநர், பொறியியல் இயக்குநர், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், பகுதி அலுவலர்கள், பகுதிப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேனியில் ரூ.1.11 கோடி மதிப்பிலான புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் பொது சுகாதார அலகு கட்டடத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ் செல்வன் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

வேளச்சேரி 176-வது வார்டில் நீரேற்று நிலையம் - பூங்கா!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, செப். 8 -

வேளச்சேரி 176-வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே. ஆனந்தம் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் நீரேற்று நிலையம் மற்றும் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.143.60 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா திறப்பு விழா இன்று (8.9.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு சீனிவாச நகரில் நடைபெறுகிறது.

இதில் மாமன்ற உறுப்பினரும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளருமான வேளச்சேரி வே.ஆனந்தம், வட்டக் கழகச் செயலாளர்கள் கே.என்.தாமோதரன், எஸ். முருகவேல் ஆகியோர் வரவேற்கின்றனர். 13வது மண்டலக்குழு தலைவர் இரா.துரைராஜ், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், மாமன்ற உறுப்பினர்கள் வேளச்சேரி பெ.மணிமாறன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் , மகேஸ்வரி முருகவேல், பகுதி நிர்வாகிகள் கழக த.ரமேஷ், சி. பழனி, எம்.ஏ. சங்கர், சே.மைதிலி, வட்டச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், க.பாரதிதாசன், தே.கோபி, ஜி.பி.எஸ்.பாலசதிஷ், வி.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன், நீரேற்று நிலையம் மற்றும் பூங்காவை திறந்து சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அசன்மௌலானா எம்.எல்.ஏ., மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆர்.நாகராஜ், பவளவண்ணன், க. பாலாஜி, ஆ.வடிவேலன், எம். நேசன், சி.முருகன், அ.கலைச் செல்வன், எம்.நாகமணி,பி. கருணாகரன் , சு.சுந்தர், செல்வராஜ் , கோ.சீனிவாசன், கு.புனிதா, தஞ்சை சந்திரன், அபிமன்னன், வ.ஆதி, சுப்பிரமணியன், ஆறுமுகம், ஆர். பழனி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். சி.அமலதாஸ். ம.திருமால், எஸ்.விநாயகமூர்த்தி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழத்தினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர்கள் கே.என். தாமோதரன், எஸ்.முருகவேல் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நீதியரசர் எஸ்.ஜெகதீசன் தலைமை! பன்முக நோக்கில் கலைஞரின்

படைப்பிலக்கியங்கள் - பன்னாட்டுக் கருத்தரங்கம்!

வா.மு.சேதுராமன் - கோவி. செழியன்- சி.துரைக்கண்ணு - முனைவர் பேபி குல்நாஸ் - முனைவர் வா.மு.சே. ஆண்டவர் பங்கேற்பு!

சென்னை, செப்.8-

தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் - பச்சையப்பன் கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத் துறை சார்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் - பன்முக நோக்கில் கலைஞரின் படைப்பிலக்கியங்கள் மற்றும் பச்சையப்ப முதலியார் அறமும் வாழ்வும் வரலாறும் நூல் வெளியீட்டு விழா இன்றும் (8.9.2023), நாளையும் (9.9.2023) ஆகிய இரு தினங்கள், சென்னை பச்சையப்பன் கல்லூரி திருவள்ளுவர் மன்றத்தில் நடைபெறுகின்றது.

8-ஆம் தேதி அன்று காலை 10 மணி முதல் 11.30 மணி வரை தமிழ்த்துறை மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சி துவங்குகிறது.

பச்சையப்பன் கல்லூரி முதல்வர் முனைவர் பேபி குல் நாஸ் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நிகழ்ச்சிக்கு பச்சையப்பன் அறக்கட்டளை செயலர் சி.துரைக்கண்ணு முன்னிலை வகிக்கிறார்.

பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகி நீதியரசர் எஸ். ஜெகதீசன் தலைமை வகிக்கிறார்.

முனைவர் வா.மு.சே.ஆண்டவர் கருத்தரங்க நோக்கவுரையாற்றுகிறார்.

கலைஞர் ஆய்வுக்கோவை முதல் நூலைப் பெற்று பச்சையப்ப முதலியார் அறமும் வாழ்வும் வரலாறும் நூல் வெளியீட்டு சிறப்புரை முனைவர் வி.திருவள்ளுவன்,

கருத்தரங்க தொடக்க உரை முனைவர் கி.சு.கிருஷ்ணசாமி, முனைவர் மு.தங்கராசு, முனைவர் க.சுபாஷினி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முனைவர் ச.உமா நன்றி கூறுகிறார். முனைவர் பா.முத்துசாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4 மணி வரை நாட்டான் அரங்கத்தில் தமிழ்த் துறை மாணவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்குகிறது.

முனைவர் பேபி குல்நாஸ் வரவேற்றுப் பேசுகிறார்.

நீதியரசர் எஸ்.ஜெகதீசன், சி.துரைக்கண்ணு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முனைவர் ந.அருள் தலைமை வகிக்கிறார். சான்றிதழ் வழங்கி முனைவர் கோ.வி. செழியன் சிறப்புரையாற்று கிறார்.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், முனைவர் சு. பாலு, எம்.இலியாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முனைவர் வா.மு.சே. ஆண்டவர் நன்றி கூறுகிறார்.

கருத்தரங்கில் பேராசிரியர் இராம. குருநாதன், பேராசிரியர் ப.மகாலிங்கம், முனைவர் அரங்க மல்லிகா, முனைவர் க.சேக்மீரான், முனைவர் ந.இளங்கோ, முனைவர் சூ.அமல்ராஜ், முனைவர் தமிழ்வேலு, முனைவர் மு.பழனியப்பன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

நெடுஞ்சாலைத் துறை மூலம்

வளசரவாக்கம்- ராமாபுரம் (வழி) வள்ளுவர் நகர் சாலை சீரமைப்புப் பணி!

சென்னை, செப். 8 -

சென்னை, வளசரவாக்கம் ராமாபுரம் (வழி) வள்ளுவர் நகர் சாலை வெள்ள நிவாரண திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் வசதி, குடிநீர், கழிவு நீர் இணைப்பு குழாய் பதிக்கும் பணிகள் முடிவுற்றது. தற்போது, இச்சாலையை சீரமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும் என நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளது. வளசரவாக்கம் ராமாபுரம் (வழி) வள்ளுவர் நகர் சாலை கி மீ 0/03/0 சாலையானது திருவள்ளூர் க (ம) ப கோட்டம், அம்பத்தூர் உட் கோட்டம் மற்றும் பூந்தமல்லி பிரிவு சார்ந்த மாவட்ட இதர சாலை (1020) யாதும். இச் சாலையில் 2022-23 வெள்ள நிவாரண பணிகள் மூலம் மழைநீர் வடிகால் திட்டம் முடிக்க பட்டது.

த்போது குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரியம் மூலம் நடைபெற்ற குழாய்கள் பதிக்கும் பணி முடிந்து சாலை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.இப் பணிகள் யாவும் ஒரு வார காலத்திற்குள் முடிக்கபட்டு இச்சாலையானது சீரமைக்கப்படும் என நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளது.

சென்னை, வளசரவாக்கம் ராமாபுரம் (வழி) வள்ளுவர் நகர் சாலை வெள்ள நிவாரண திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் வசதி, குடிநீர், கழிவு நீர் இணைப்பு குழாய் பதிக்கும் பணிகள் முடிவுற்றது. தற்போது, இச்சாலையை சீரமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும் என நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளது.